# 1. அரசியல் அறிவியலின் தன்மையும் பரப்பும்

## [Nature and Scope of Political Science]

### 1. 1. அரசியல் அறிவியலின் தன்மையும் பரப்பும் பற்றி விளக்கி எழுதுக?

அரசியல் அறிவியல் என்பது அரசு பற்றிய படிப்பு ஆகும். மனிதனிடம் இயற்கையிலேயே இணைந்து வாழவேண்டும் என்ற ஆர்வம் உள்ளது. இதுவே சமுதாயம் தோன்றுவதற்கான அடிப்படையாகும். மனிதன் ஒரு சமுதாய, அரசியல் மிருகம் எனப்படுகிறான். சமுதாயத்தில் சச்சரவுகள் எழுந்தன. இவற்றை ஒழுங்குசெய்ய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது; அரசாங்கத்தின் தோற்றம் ஏற்பட்டபோது அரசியலும் தோன்றியது.

இன்று அரசு இல்லாமல் ஒரு சமுதாயம் அமைவது இயலாத ஒன்று எனலாம். எனவே, அரசியல் அறிவியல் என்பது ஒரு முக்கியமான படிப்பு எனலாம். அது அரசு எவ்வாறு உள்ளது என்பதை மதிப்பிடுகிறது. அரசு எவ்வாறு இருந்தது என்பதை ஆய்வு செய்கிறது. அரசு எப்படி இருக்கவேண்டும் என்பதை அனுமானிக்கிறது. இவ்வாறு அரசியல் அறிவியல் அரசின் எல்லா அம்சங்களையும்பற்றிய படிப்பாகும்.

#### பொருள் விளக்கம்

பல அறிஞர்கள் அரசியல் அறிவியல்பற்றிய விளக்கங்களை வழங்கியுள்ளனர். R. G. கெட்டல் அரசியல் அறிவியலை அரசு பற்றிய அறிவியல் என்கிறார். அரசியல் அறிவியல் அரசில் தொடங்கி அரசில் முடிவடைகிறது எனும் விளக்கத்தை கார்னர் (Garner) என்பார் கூறுகிறார். அரசின் பல அம்சங்களைப் புலனாய்வு செய்வது அரசியல் அறிவியல் எனும் கருத்தினை சீலி வழங்குகிறார். ஸ்டீபன் லீலாக் (Stephan Lealock) அரசாங்கத்தைப்பற்றியது அரசியல் அறிவியல் எனும் எளிமையான விளக்கத்தை அளிக்கிறார். மேற்கூறப்பட்ட விளக்கங்கள் அரசியல் நிறுவனங்கள் பற்றிய ஆய்விற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. பிற்கால அறிஞர்கள் மற்றச் செயல்கள் பற்றியும் அம்சங்கள் பற்றியும் கவனம் செலுத்தினர்.

Scanned with CamScanner

மனித, சமுதாயக் கட்டுப்பாடுபற்றிய படிப்பே அரசியல் அறிவியல் என்கிறார் காட்லின் (Catlin); அதிகாரம், செல்வாக்கு ஆகியவை பற்றிய படிப்பே அரசியல் அறிவியல் என்னும் விளக்கமும் அளிக்கப்படுகிறது. அரசியல் அறிவியலில் அண்மைக் காலமாக நடக்கைபற்றி அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனவே, அரசியல் நடக்கைபற்றிய அறிவியலே அரசியல் அறிவியல் என்றும் கூறப்படுகிறது.

அரசியல் அறிவியல்பற்றிப் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. அவற்றில் சில நிறுவனங்களைப்பற்றியதாகவும் சில அரசியல் நடவடிக்கைகள்பற்றியும் அமைந்துள்ளன. அரசியல் நடக்கையைச் சிலர் மையமாகக் கொண்டுள்ளனர். இவ்வாறு வெவ்வேறு அறிவியலாளர்கள் வெவ்வேறு விளக்கங்களைத் தருகின்றனர். அரசின் வெவ்வேறு அம்சங்களை அவர்கள் மனத்தில் கொண்டு விளக்கங்கள் அளித்துள்ளனர் சுருங்கக்கூறின் அரசியல் அறிவியல் என்பது அரசின் அனைத்து அம்சங்களையும்பற்றிய படிப்பு எனலாம்.

### பரப்பு—மாறிக்கொண்டே உள்ளது (Scope)

ஒரு படிப்பின் பரப்பு என்பது அப் படிப்பின் ஆய்விற்குரிய பொருள் ஆகும். அப் படிப்பு எதனைப்பற்றியது என்ற விளக்கம் அதனுடைய பரப்பினைத் தெளிவாக்கும். அரசியல் அறிவியலில் எவற்றைப்பற்றிய படிப்பு நடக்கிறது என்பது அதன் பரப்பைக் குறிக்கும். அரசியல் அறிவியல் என்பது அரசைப் பற்றிய படிப்பு. அரசு மனிதர்களால் ஆனது. மனிதர்கள் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். எனவே, அரசியல் அறிவியலும் மாறிக்கொண்டே இருக்கக்கூடாது எனலாம். காலப்போக்கில் அரசியல் அறிவியலின் படிப்பும் மாறிக்கொண்டே வருகிறது எனலாம்.

### பழமைக் காலம் (Ancient Period)

மிக முந்திய காலத்திலேயே அரசியலைப்பற்றிச் சிந்தித்து எழுதியவர்கள் கிரேக்கர்கள். போலிஸ் (Polis) எனும் கிரேக்கச் சொல்லிலிருந்துதான் பாலிடிக்ஸ் (Politics) என்னும் சொல் பிறந்தது. அன்று அச்சொல் நகர அரசைக் குறித்தது. பழங் காலக் கிரேக்கத்தில் ஒவ்வொரு நகரும் ஒரு அரசாக விளங்கியது. அரசியலின் தந்தையெனக் கருதப்படும் அரிஸ்டாடில் மனிதனை அரசியல் மிருகம் எனக் கருதுகிறார். அரிஸ்டாடிலைப் பொறுத்தவரை ஒவ்வொரு மனிதனும் ஒரு அரசியல் வாதியே. ஆனால் சில மனிதர்கள் மற்றவர்களைவிட அதிக-

மான அளவு அரசியல் ஈடுபடு உடையவர்களாக இருக்கின்றனர். அரிஸ்டாடிலின் இவ்விளக்கம் அரசியலுக்கு விரிவான பரப்பை அளிக்கிறது. பழமைக் காலத்தில் அரசியல் அறிவியல் விரிந்த பரப்பினைப் பெற்றிருந்தது.

## அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு

அரசியலின் பரப்பு பதினாறாம் இருபதாம், நூற்றாண்டுகளுக்கு இடையில் சுருங்கியது எனலாம். ஜான் போதன் (Jean Bodin) எனும் பிரெஞ்சு அறிஞர் அரசியல் அறிவியல் என்னும் சொல்லை வடித்தார். அரசின் சட்டரீதியான அம்சத்திற்கு அவர் அதிக முக்கியத்துவம் அளித்தார். மாண்டஸ்க்யூ (Montesqueu) அதிகாரப்·பிரிவினைக் கோட்பாட்டை வடித்தார். இக் கோட்பாடு ஒரு அரசாங்கத்தை சட்டமன்றம், நிர்வாகத் துறை, நீதித்துறை எனும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது, அரசியலின் பரப்பை இம்மூன்று பிரிவுகளின் படிப்பு என்னும் நிலைக்கு இது மாற்றியது.

இருபதாம் நூற்றாண்டில் அரசியல் அறிவியலின் பரப்புபற்றிப் புதிய கருத்துக்கள் தோன்றின. அரசாங்கத்தின் மூன்று பிரிவுகள்பற்றிய படிப்பு எனும் நிலை குறைவானதாகக் கருதப் பட்டது. எல்லாவிதமான அரசியல் முறைகளிலும் அரசியல் கட்சிகளும் தன்னலக் குழுக்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே அரசியல் அறிவியலில் இவற்றைப்பற்றிய ஆய்வும் இடம் பெறவேண்டும் என்பது சுட்டிக் காட்டப்பட்டது. மேலும் அரசியல் அறிவியலில் சில புதிய கிளைப் படிப்புகளும் தோன்றி யுள்ளன. அவற்றின் காரணமாக அரசியல் அறிவியலின் பரப்பு மேலும் விரிவடைந்துள்ளது.

## அரசியல் கோட்பாடு (Political Theory)

அரசியல் கோடுபாடு, அரசியல் அறிவியலின் முக்கியமான பிரிவு ஆகும். இப்பிரிவு அரசியல் அறிவியல்பற்றிய கோட்பாட்டு ரீதியான படிப்பினை வலியுறுத்துகிறது. அரசின் தோற்றம், தன்மை, நோக்கம், பணிகள் மற்றும் அமைப்பு ஆகியவை பற்றியும் அரசியல் கோட்பாடு கூறுகிறது. இப்பிரிவு வெறும் உண்மைகளைப்பற்றிமட்டும் கவனம் செலுத்தவில்லை. கிடைத்திருக்கும் உண்மைகளின் அடிப்படையில் சில பொதுப் படையான விதிகளைக் கண்டறிய முயல்வது இப்படிப்பு.

**அரசியல் நிகழ்ச்சிகள்** எல்லா அரசுகளிலும் நிகழ்கின்றன. இவற்றிடையே, சில பொதுவான தன்மைகள் காணப்படு

Scanned with CamScanner

கின்றன. அரசியல் நிறுவனங்களிடையிலும் (institutions) பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு சில பொதுப்படையான முடிவுகட்கு வர முயல்கிறது அரசியல் கோட்பாடு. இவ்வாறு அரசியல் கோட்பாடு அரசியல் அறிவியலுக்கான பரப்பை ஒரு குறிப்பிட்ட பகுதியில் எல்லை யிட்டுக் காட்டுகிறது.

**அரசியல் தத்துவம் (Political Philosophy)**

அறிவின் முதிர்ச்சி நிலையைத் தேடுவது தத்துவம் எனப் படுகிறது. ஒரு குறிப்பிட்ட படிப்புப் பிரிவில் பொதுவான விதிகள் அல்லது கொள்கைகளைக் கூட்டிச்சேர்ப்பதை அது குறிக்கிறது. அரசியல் தத்துவம் என்பதை அரசியல் விதிகள் அல்லது கொள்கைகளின் தொகுப்பு எனலாம். கோட்பாடு என்பது எதிர்காலத்தில் வரப்போகும் ஒன்றினைப்பற்றி அனு மானம் செய்வதாகும். ஏற்கெனவே நிகழ்ந்துவிட்ட சில நிகழ்ச்சி களின் அடிப்படையில் கொள்கைகள் வகுக்கப்படலாம். கோட் பாட்டில் உருவாக்கப்பட்ட கொள்கைகளை ஓரளவு சரிபார்ப் பதற்கான வாய்ப்பும் உள்ளது. அரசியல் கோட்பாட்டையும் அரசியல் தத்துவத்தையும் ஒன்றே எனச் சொல்வாரும் உண்டு. எனினும் அவற்றிடையே சில வேறுபாடுகள் உள்ளன.

**வேறுபாடுகள் :** அரசியல் கோட்பாடு என்பது அரசியல் தத்துவத்தைவிட முறைப்படி அமைந்தது. ஓரளவு கண் டுணரப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் அது அமைகிறது. அரசியல் அறிவியலாளர்கள் அரசியல் கோட்பாடுகளை வடிக்க முயற்சிக்கின்றனர். அரசியல் தத்துவத்தை அரசியல் தத்துவ ஞானிகள் உருவாக்குகின்றனர். அரசியல் தத்துவத்தில் தொடர்ச்சியும் தெளிவும் இல்லாமல் இருக்கலாம். அது இலட்சி யார்த்தமானதாக (idealistic) அமையலாம். பல அனுமானங் களின் அடித்தளத்தில் அது உருவாக்கப்படலாம்.

அரசியல் தத்துவம் என்பது அரசியல் சிந்தனை (Political Thought) எனவும் அழைக்கப்படுகிறது. வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த வெவ்வேறு தத்துவ ஞானிகளின் அரசியல் சிந்தனை களின் தொகுப்பே அது. சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாடில், ரூசோ, மான்டெஸ்க்யூ போன்ற தத்துவ ஞானிகளின் சிந்தனை கள் அதில் அடங்கியுள்ளன. அரசு, அரசாங்கம், இறைமை, சட்டம், நீதி போன்றவைபற்றிய அவர்களது கருத்துக்கள் அரசியல் தத்துவத்தில் அடங்கியுள்ளன. அரசியல் கோட்பாடு அல்லது அரசியல் தத்துவம் பற்றிய படிப்புமட்டுமே அரசியல்

Scanned with CamScanner

அறிவியல் ஆகாது. அரசியல் அறிவியல் அவற்றைவிட அதிகமானது.

**ஒப்பீட்டு அரசியல் (Comparative Politics)**

அரசுகள் வெவ்வேறான அரசியல் நிறுவனங்களைப் பெற்றுத் திகழ்கின்றன. ஒப்பீட்டு அரசியல் இத்தகைய அரசியல் நிறுவனங்கள்பற்றிய ஒப்பீட்டு வகையிலான படிப்பாக அமைந்துள்ளது. ஒப்பீட்டு அரசியலில் 'அரசியல்' என்னும் சொல் **அரசியல் செயல்** (Political activity), அரசியல் **செயல்முறை** (Political process), **அரசியல்** அதிகாரம் (Political power) ஆகிய மூன்று பொருள்களை அளிக்கிறது. சச்சரவுகளையும் சச்சரவுகட்கான தீர்வுகளைக் காணுதலையும் அரசியல் செயல் குறிக்கிறது. அரசியல் செயல்முறை என்பது முடிவு எடுக்கும் முறையைக் குறிக்கிறது. முடிவு எடுப்பதில் சட்டமன்றம் நிர்வாகத்துறை நீதித்துறை ஆகியவை மட்டுமின்றி தன்னலக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் பங்குபெறுகின்றன.

**அரசியல் கொள்கைகள்** (Political Ideologies)

இலட்சியங்களின் தொகுப்பைக் கொள்கை (ideology) எனலாம். எதிர்காலத்தில் அரசியல் தொடர்பான மனதுக்கிசைந்த கற்பனையே இலட்சியக் கொள்கை எனச் சொல்வதுண்டு. பல அரசியல் கொள்கை நடைமுறைக்கேற்றவையாய் அமைவதில்லை அரசு அல்லது சமுதாயத்திற்கு ஒரு இலட்சிய இலக்கை அரசியல் கொள்கை நிர்ணயிக்கிறது. அவ்விலக்கை அடைவதற்கான செயல்முறைகளை அரசு அல்லது சமுதாயம் மேற்கொள்கிறது. தற்காலத்தில் ஒவ்வொரு அரசியல் முறையமைவும் ஒரு அரசியல் கொள்கையை அடிப்படையாய்க் கொண்டுள்ளது.

அரசியல் கொள்கை அரசியல் முறையமைவின் செயற்பாடுகளை நியாயப்படுத்துகிறது. சான்றாக, தனியார் சொத்துக்கள் தேச உடைமையாக்கப்படும்போது சோஷலிசக் கொள்கையை அடைவதற்காக அவ்வாறு செய்யப்படுவதாகக்கூறி அச்செயல் நியாயப்படுத்தப்படுகிறது. அரசியலில் மட்டுமின்றிப் பொருளாதாரத்திலும் கொள்கைகள் உள்ளன. அரசியல் கொள்கை ஒரு இலக்கை அடைவதற்காக மக்களை உழைக்கத் தூண்டுகிறது. **சோஷலிசம், கம்யூனிசம், காந்தீயம், முதலாளித்துவம், மார்க்சிசம், நாசிசம், பாசிசம், மக்களாட்சி** போன்றவற்றை அரசியல் கொள்கைகளுக்கான சில சான்றுகளாகக் கொள்ளலாம். மேற்கூறப்பட்ட அரசியல் கொள்கைகளில் சில பயனுடையவையாகவும்

Scanned with CamScanner

வலுவானவையாகவும் திகழ்கின்றன. சில பயனற்றவையாகவும் வலுவற்றையாகவும் உள்ளன. நாசிசமும் பாசிசமும் அபாயகரமானவை. இத்தகைய அரசியல் கொள்கைகள்பற்றிய படிப்பு அரசியல் அறிவியலின் பரப்பை விரிவாக்குகிறது.

**பன்னாட்டு அரசியல்** (International Politics)

அறிவியலும் தொழில் நுட்பமும் உலகத்தின் நிலவியல் பரப்பைச் சுருக்குகின்ற அளவு செய்தித் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளைப் படைத்துள்ளன. இன்று உலகிலுள்ள அரசுகள் பல்வேறு காரணங்களுக்காக ஒன்றையொன்று சார்ந்துள்ளன. பிற அரசுகளுடன் தொடர்பற்ற தனியான வாழ்க்கையை எந்த அரசும் சிந்தித்துப் பார்க்க இயலாத நிலை நிலவுகிறது. இக் காரணங்களால் பன்னாட்டு அரசியல் என்பது அரசியல் அறிவியலின் புதிய பிரிவாக விரைந்து வளர்ந்துள்ளது.

பன்னாட்டளவில் அரசுகளிடையிலான உறவுகளை ஒழுங்கு செய்யப் **பன்னாட்டுச் சட்டம்** (International law) உள்ளது. முதல் உலகப்போரின் முடிவில் உலக அமைதி காக்கச் **சர்வதேச சங்கம்** (the League of Nations) உருவாக்கப்பட்டது. பன்னாட்டளவில் தோற்றுவிக்கப்பட்ட முதல் நிறுவனம் அதுவாகும். அவ்வமைப்பு ஏறத்தாழ இருபது ஆண்டுகள் செயல்பட்டு மறைந்தது. இரண்டாவது உலகப்போரின் முடிவில் ஐக்கிய நாடுகள் நிறுவனம் (United Nations Organisation) உருவாக்கப்பட்டது. உலக அமைதி காக்கவும், உலக மக்களின் மேம்பாட்டிற்காகவும் பல்வேறு அரிய சேவைகளை அவ்வமைப்புச் செய்துவருகிறது. இத்தகைய விஷயங்கள்பற்றிய படிப்பே **பன்னாட்டு அரசியல்** ஆகும். பன்னாட்டு அரசியல் இன்று முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. பன்னாட்டு அரசியலில் நிகழ்கின்ற சில நிகழ்ச்சிகள் உலகம் இருக்குமா இருக்காதா என்னும் கேள்வியையும் அச்சத்தையும் எழுப்பும்வண்ணம் அமைந்துள்ளன. பன்னாட்டு அரசியல் என்னும் படிப்பும் அரசியல் அறிவியலின் பரப்பை விரிவுபடுத்தியுள்ளது எனலாம்.

### வினாக்கள்

1. சிறுகுறிப்பு வரைக :
   (a) அரசியல் தத்துவம்.
   (b) அரசியல் கொள்கைகள்.
2. அரசியல் அறிவியலின் தன்மையும் பரப்பும் பற்றி விளக்கி எழுதுக ?

Scanned with CamScanner